விவசாய மறுநிதிக்கழகத்திடமிருந்து நிதி உதவி

*682 வின.— திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில், விவசாய மறுநிதிக்கழகத்தின் (அக்ரி கல்சர் மறுநிதிக் கார்ப்பரேஷன்) மூலம் அரசுக்கு எவ்வளவு தொகை கிடைத்தது ?

(இ) அந்தத் தொகை எந்தெந்தத் திட்டங்களுக்காகச் செலவு செய்யப்பட்டது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) பம்பாய் விவசாய மறுநிதிக்கழகம் தமிழக அரசுக்கு நேரடியான பண உதவி ஏதும் அளிப்பதில்லை.

(இ) கேள்வி எழவில்லை.

World Bank loan for Development of Agriculture

*683 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Honourable the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether this Government approached the Centre during 1974 to obtain loan from the World Bank for the development of agriculture; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், 1974-ஆம் வருஷத்தில் தஞ்சாவூர் டெல்டா பிரதேசத்தில் அபிவிருத்தி செய்ய 30 கோடி ரூபாய் கொடுக்க ஏற்கெனவே பேச்சு வார்த்தை நடத்தி ஒத்துக் கொண்டிருந்தார்களே. ஆனல் அது எவ்வாறு தடைப்பட்டது? அதற்கு என்ன காரணம் என்று அமைச்சரவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதற்குத் தனியாகக் கேள்வி கேட்க வேண்டும்.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, தற்பொழுது கிராமக் கூட்டுறவு நாணயச் சங்கங்களில் கடன் கொடுக்கிறார்கள். மத்திய வங்கியிலிருந்து தருகிறார்கள். மத்திய வங்கி உலக வங்கியிடமிருந்து வாங்குவதாகச் சொல்கிறார்கள். தற்பொழுது